


# பனப்பாக்கம் - தொழில்பூங்கா!

## மின்வாகன உற்பத்தியில் ராணிப்பேட்டை

**திராவிட மாடல் அரசு**

**91**

**பன்னீர் பெருமாள்**

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

தமிழ்நாட்டின் தொழிற்வளர்ச்சி 1970-ஆம் ஆண்டில் சென்னை, மணலியில் ஒரு தொழிற்சாலையைத் திறந்து வைத்துப் பேசிய முத்தமிழறிஞர் கலைஞர், “நம் நாட்டில் பூமிக்கு அடியில் தங்கமோ, எண்ணையோ கிடையாது. நாம் தொழிற்சாலைகளை நம்பியே உள்ளோம்” என்று கூறியிருப்பார்.

அதன் அடிப்படையில்தான், 1971-ஆம் ஆண்டில், அவர் முதலமைச்சராக இருந்தபோது, தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (சிப்காட்) எனத் தொழில்வளர்ச்சிக்குத் தனி நிறுவனத்தை உருவாக்கினார் . தமிழ்நாடு முழுவதும் பரவலாகத் தொழிற்பேட்டைகள், சிறப்பு உள்கட்டமைப்புத் திட்டங்களுடன் உருவாக்குவதே சிப்காட்டின் நோக்கம். பின்னர், தொழில்துறை வளர்ச்சிகளுக்கு ஏற்ப தொழிற்பூங்கா, சிறப்புப் பொருளாதார மண்டலம் ஆகியவற்றையும் சிப்காட் உள்ளடக்கியது.

1973-ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதல் ‘சிப்காட் தொழிற்பேட்டை’யை ராணிப் பேட்டையில் தொடங்கி வைத்தார் கலைஞர். அவர் வழியில் நடைபெறும் நம் திராவிட மாடல் அரசு, தமிழ்நாட்டின் தொழில்துறையை இந்தியாவின் முதன்மைப் பட்டியலில் கொண்டு வருவதற்காகப் பல பணிகளைச் செய்து வருகிறது.

கடந்த காலங்களில், தமிழ்நாடு முழுவதும் 23 சிப்காட் தொழிற்பூங்காக்கள் இருந்த நிலையில், திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற 3 வருடங்களில் கடந்த மாதம் திறந்து வைக்கப்பட்ட ராணிப்பேட்டை - பனப்பாக்கம் தொழிற்பூங்காவுடன் சேர்த்து 27 சிப்காட் பூங்காக்கள் இதுவரை உருவாக்கப்பட்டுள்ளன. இந்த எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டு வருகின்றன.

### அடிக்கல் நாட்டிய முதல்வர்

ராணிப்பேட்டை மாவட்டத்தில், பனப் பாக்கம் பகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை ஆயிரத்து 213.43 ஏக்கர் பரப்பளவில் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதன்படி ராணிப்பேட்டை மாவட்டத்தில், நெமிலி வட்டத்தில் துறையூர், அகவளம், பெருவளையம், நெடும்புலி ஆகிய கிராமங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் ‘பனப்பாக்கம் தொழிற்பூங்கா’ அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டது.





இந்தத் தொழிற்பூங்காவில் 470 ஏக்கர் பரப்பளவில் ஜெ.எல்.ஆர். டாடா மோட்டார்ஸ் நிறுவனம் ரூ.9ஆயிரம் கோடி முதலீடு மற்றும் 5,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் உற்பத்தி ஆலை உருவாக்கப்பட உள்ளது. கடந்த செப்படம்பர் மாதம் 28-ஆம் தேதி திராவிட மாடல் நாயகர் நமது முதலமைச்சர் இந்தத் தொழிற்பூங்காவுக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்தத் திட்டத்திற்காக டாடா மோட்டார்ஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம், கடந்த மார்ச் மாதம் 13-ஆம் தேதி, முதல்வர் முன்னிலையில், கையெழுத்தானது. ஒப்பந்தத்தை தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண் இயக்குநரும், டாடா மோட்டார்ஸ் குழுமத் தலைமை நிதி அலுவலரும் பரிமாறிக் கொண்டார்கள். புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்ட ஆறு மாதத்திற்குள் இந்தத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு, திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. டாடா குழுமத்தின் தலைவர் சந்திரசேகரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்ட நிகழ்ச்சியில், முதலமைச்சர் அந்த ஆலைக்கு அடிக்கல் நாட்டினார்.

**தெற்காசியாவிலேயே முதலீடுகள் மேற்கொள்ள சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டினை மேம்படுத்த வேண்டும் என்கிற இலக்கில், நம்முடைய திராவிட மாடல் அரசு வெற்றிபெற்று வருகிறது.**

இந்த ஆலையில் ‘ஜாக்வார்’, ‘லேண்ட் ரோவர்’ ஆகிய சொகுசு கார்கள் உற்பத்தி செய்யப்பட உள்ளன. ஆலையின் உற்பத்தி திறன் ஆண்டுக்கு இரண்டு லட்சம் கார்களாக இருக்கும் எனவும், அதில் மூன்றில் ஒரு பகுதி ஜாகுவார், லேண்ட் ரோவர் மின்சார கார்களாக இருக்கும் எனவும் தகவல்கள் சொல்லப்பட்டுள்ளன. இதுதவிர, மின்சார கார் உற்பத்திக்கான உதிரிபாகங்களின் தொழிற்சாலைகளும் இந்தப் பகுதியில் உருவாக்கப்பட உள்ளன.

### காலணி பூங்கா

பனப்பாக்கம் சிப்காட் தொழிற்பேட்டையில் 250 ஏக்கர் பரப்பளவில் மெகா ‘காலணி உற்பத்திப் பூங்கா’ அமைக்கப்படவுள்ளது. இதன் மூலம் 20 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்க உள்ளது.

உலக அளவில் மிக பெரிய காலணி உற்பத்தி செய்து வரும் தைவானை சேர்ந்த ஹாங் பூ இண்டஸ்ட்ரியல் குழுமம், பனப்பாக்கம் சிப்காடில் தொழிற்சாலையை விரிவுபடுத்த ரூ.1,500 கோடி முதலீடுச் செய்துள்ளது. இதற்காக முதல்வர் முன்னிலையில் தமிழக அரசுடன் ஹாங் பூ இண்டஸ்ட்ரியல் குழுமம் ஒப்பந்தம் செய்துள்ளது. இந்தத் தொழிற்சாலை மூலமாக சுமார் 20 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும், 5 ஆயிரம் பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்த முதலீடு மாநிலத்தில் காலணி உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்குப் பெரும் உத்வேகத்தை அளிக்கும்.

ஹாங் பூ நிறுவனம் விளையாட்டு வீரர்களுக்கு ஆடைகளையும் வடிவமைத்து, தயாரித்து விற்பனை செய்து வருகிறது. நைக் மற்றும் பூமா போன்ற ஸ்போர்ட்ஸ் காலணி பிராண்டுகளின் முன்னணி உற்பத்தியாளர்களில் இந்த நிறுவனமும் ஒன்றாகும். இந்த ஹாங் பூ நிறுவனம் மூலம், ராணிப்பேட்டை மட்டுமின்றி, சுற்றுப்புற மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இவை தவிர, கிராண்ட் அட்லாண்டிக்கா பனப்பாக்கம் செஸ் டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தொழிலை விரிவுபடுத்த, ரூ.500 கோடி முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் 5 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாக சுமார் 2 ஆயிரம் பேருக்கும் என மொத்தமாக 7 ஆயிரம் பேருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும் திட்டமும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

தெற்காசியாவிலேயே முதலீடுகள் மேற்கொள்ள சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டினை மேம்படுத்த வேண்டும் என்கிற இலக்கில், நம்முடைய திராவிட மாடல் அரசு வெற்றிபெற்று வருகிறது. இதுவரை ரூ.10 லட்சம் கோடிக்கு மேல் முதலீடுகளை ஈர்த்திருக்கிறோம். 31 லட்சம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை ஏற்படுத்தி இருக்கிறோம். முதலீடுகளை ஈர்ப்பது மட்டுமல்ல, அதை விரைந்து செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் திராவிட மாடல் அரசு செய்து வருகிறது என்பதற்கு ‘பனப்பாக்கம் சிப்காட் தொழிற்பூங்கா’ சான்றாக உருவாகி வருகிறது.

**...சாதனை தொடரும்**

### ‘விஷத்தைக் கக்கும் ஆளுநர் ரவி’

தமிழ்நாடு பிறமாநிலங்களில் இருந்து தனிமைப்பட்டுள்ளதாக, ஆளுநர் ரவி பேசியுள்ளதற்கு, சமூக வலைதளங்களில் பலரும் பதிலடி கொடுத்து வருகின்றனர். ‘விஷத்தைக் கக்கும் ஆளு‘நரி’ ரவி’ எனத் தலைப்பிட்டு வாசு சுமதி என்பவரின் பதிவு இது. ஸ்டேட் (STATE) என்று ஆங்கிலத்தில் சரியாக உச்சரிக்கத் தெரியாத அவர் ‘இஸ்டேட்’ என்று கூறுகிறார். இவர் நமக்கு மொழிப் பாடம் எடுக்கிறார்.

வட இந்திய மாநிலங்களில் மும்மொழிக் கொள்கையாம். அப்படியென்றால், கற்பிக்கப்படும் மூன்று மொழிகள் யாவை? பீகார், ராஜஸ்தான், உத்தரபிரதேசம் மற்றும் மத்திய பிரதேசத்தில் உள்ள பள்ளிகளில் மலையாளம், தமிழ், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பெங்காலி ஆகியவற்றில் ஏதேனும் கற்பிக்கப்படுகிறதா?

ஆனால், இங்கு அனைத்து சி.பி.எஸ்.இ (CBSE) பள்ளிகள் மற்றும் பல தனியார் பள்ளிகளில் இந்தி பாடம் கற்பிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டு மக்கள் கேரளா, கர்நாடகம் சென்றால், தொடர்பு கொள்வதில் சிரமப்படுகிறார்களாம். நாங்கள் அங்கு போனாலும், அவர்கள் இங்கு வந்தாலும், எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. பள்ளிக்கூடம் போகாதவர்கள் கூட ‘ப்ரோக்கன் இங்கிலீஷ்’ பேசிட்டு போய்கிட்டே இருப்போம்.

அப்புறம் என்னமோ தனிமைப்பட்டு போயிட்டோமாம். நீங்கள் எந்தத் தனிமையைப் பற்றி பேசுகிறீர்கள்? நீங்கள்தான் ஆங்கிலம் பயிலாமல் ஹிந்தி என்று குண்டுசட்டியில் குதிரை ஓட்டிக்கொண்டு இருக்கிறீர்கள். எங்கள் மக்கள் மற்ற மாநிலங்களில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் எவ்வளவு வெற்றிகரமாக இருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?

தென்னிந்தியாவில் இவ்வளவு காலம் பணியாற்றியும் எத்தனை தென்னிந்திய மொழிகளைப் படிக்க, எழுத, பேச உங்களுக்குத் தெரியும்? ரவி அவர்களே... அது இஸ்டேட் இல்லை... ஸ்டேட்,.. என்ற அவரின் பதிவு கவனிக்க வைக்கிறது.

### :.ப்ளாஷ்பேக்





எம்.ஏ.ரகீம்

#### 1977-ஆம் ஆண்டு நிகழ்வு!

1977-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4-ஆம் தேதி நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகம் 48 இடங்களைக் கைப்பற்றி, எதிர்க்கட்சியாகப் பொறுப்பேற்றது. அப்பொழுது குன்னூர் (தனி) சட்டமன்றத் தொகுதியில் மு.அரங்கநாதன் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார். அதையடுத்து, தலைவர் கலைஞரிடம் வாழ்த்து பெறுவதற்காக சென்னை வந்து, கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்தோம். இன்றைய நீலகிரி மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக், மாவட்டப் பிரதிநிதி கி.விஸ்வநாதன் இவர்களுடன் நானும் இடம்பெற்ற இந்தப் புகைப்படம் என்றும் மறக்காத அனுபவத்தைச் சொல்லும்.

**- எம்.ஏ.ரகீம், 17-வது வார்டு கிளைச் செயலாளர், கிருஷ்ணாபுரம், குன்னூர், நீலகிரி மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்

#### திராவிடப் பண்பாடு!


1958-ஆம் ஆண்டு ஏப்ரல் 26 மற்றும் 27 தேதிகளில் கர்நாடக மாநில தி.மு.கழகத்தின் 2-வது மாநில மாநாடு நடைபெற்றது. மாநாட்டின் தலைவர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ., ‘திராவிடத்தை யார் கேட்கிறார்கள், ஏன் கேட்கிறார்கள்?’ என்கிற எழுச்சி உரையை ஆற்றினார். தமிழ், ஆந்திரம், கன்னடம், கேரளம்–இந்த நான்கு மொழிகளையும் கொண்ட ஒரே கலாசாரத்தையும், நாகரிகப் பண்பாட்டையும் இணைத்து வாழும் ஒருமைப்பாட்டையும் கொண்டது திராவிடம். ஆனால், அது வடநாட்டிலிருந்து எல்லா வகையிலும் மாறுபட்டது என்கிற அவரது உரை பல விளக்கங்களை அளித்தது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**636**

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131